



# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 06.08.2011



முதற்பக்கம்
அதிரடி
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
கவிமலர்
தாயகம்
புளொட்
தூ
நெருப்பு
டெலோ நியூஸ்
பி.ஈ.ஓ.ரி.சுவிஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
அறிவுடன்
கிருத்தியம் பெண்ணியம்
புதியபாதை
அலை
பூர்வீகம்
பூந்தளிர்
எங்கள்தேசம்
சலசலப்பு
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
ரீவடை
இணையம்
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழ்முஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஹீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்

Asientribune
Lines-Magahzine
The lka academic
Tamil Week sldf
Uthr


## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் - 8

**<u>என்னை ஏற்க மறுத்த புலி முகாம்கள்!</u>**



புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளன் சின்னவனை மீண்டும் அங்கே கண்டதும், இன்னமும் ஏதோ விபரீதங்கள் தொடரப் போகின்றன எனத் தோன்றியது.

சின்னவன் என்னைக் கண்டதும், "எப்படி ஐயா இருக்கிறியள்?" என 'மிகுந்த அக்கறையுடன்' வினவினான்.

நான், "இருக்கிறேன்" என சுருக்கமாகப் பதிலளித்தேன்.

உண்மையில் அவனது கேள்வியின் அர்த்தம,; ' எப்படி எங்கள் சிறை உபசரிப்பு?' என்ற கிண்டலும், எனது பதிலின் அர்த்தம், 'உங்கள் கையில் அகப்பட்டு விட்டேன். இனியென்னன்ன, நீங்கள் நினைத்ததைச் செய்ய வேண்டிது தானே?' என்பதும்தான். ஆனால் அதை நாம் இருவரும் போலியான நாகரீக முலாம் பூசிக் கதைத்துக் கொண்டோம்.

பின்னர் அவன,; அங்கிருந்தவனிடம் ஏதோ இரகசியமாகக் கேட்டான். அங்கிருந்தவன் அறையொன்றின் உள்ளே சென்றுவிட்டு, கையில் ஒரு கறுப்புத் துணியுடன் வந்தான். அதன் பின்னர் சின்னவனும், அவனுடன் வந்த இன்னொருவனும், அவர்கள் வந்த சைக்கிளின் அருகே என்னைக் கூட்டிச் சென்றனர்.

சின்னவனுடன் வந்தவன் சைக்கிளில் ஏறி அமர்ந்தவுடன், சின்னவன் என்னருகில் வந்து, எனது கண்களை அந்தக் கறுப்புத் துணியால் மூடிக் கட்டினான். பின்னர் மற்றவனுடைய சைக்கிள் பாரில் என்னை ஏறி இருக்கும்படி கூறினான்.

எனக்கு இந்த 'கண்கட்டு' நிகழ்வு, மனதில் பெரும் கிலேசத்தையும், துக்கத்தையும் உண்டுபண்ணியது. எனது வாழ்வில் முதல் தடவையாக, நான் பிறந்து வளர்ந்த மண்ணைப் பார்க்க முடியாதவாறு, செயற்கையாக மனிதர்களால் என் கண்கள் மறைக்கப்பட்ட போது, 'ஓ' என்று கதறி அழ வேண்டும் போல இருந்தது.

நான் சிறுவனாக இருந்தபொழுது, எனது தாய் தந்தையரின் பிறப்பிடமான அச்சுவேலி - இடைக்காட்டில், எனது இரு அண்ணன்மாருடன் சேர்ந்து, எனது பெரிய தாயாரின் அரவணைப்பில் இருந்து அங்கு கல்வி கற்றேன். அப்பொழுது அங்கு பல விதமான விளையாட்டுகளில் ஈடுபடுவோம்.

கிட்டி அடித்தல், கிளித்தட்டு, வார் ஓட்டம், தாயம் போடுதல், குண்டுக்காய், சீட்டு விளையாட்டு, மாங்கொட்டை கெந்தி அடித்தல், இலுப்பைக் கொட்டை அடித்தல், பட்டம் விடுதல், ஒளித்து விளையாடல்; என பல விளையாட்டுகளின் வரிசையில், கண்களை ஒருவருக்கு கட்டிவிட்டு, அவர் மற்றவர்களை தேடி அடையாளம் பிடிக்கும் ஒரு விளையாட்டும் இருந்தது.

ஆனால் நான் அந்தச் சிறு வயதிலேயே அந்த கண்கட்டு விளையாட்டில் சேருவதில்லை. முதல் ஒரு தடவை அதில் சேர்ந்து எனது கண்களைக் கட்டிய பொழுது, உலகமே இருண்டு நான் அனாதரவாகி விட்டதான ஒரு பய உணர்வு என்னுள் ஏற்பட்டதால், பின்னர் நான் மற்றவர்கள் அவ்விளையாட்டை விளையாடும் போது, ஒதுங்கி நின்று வேடிக்கை பார்ப்பேன். அப்படி நான் விளையாட்டாகத் தன்னும் விளையாடாத அந்த செய்கையை, இப்பொழுது இந்த புலி காட்டுமிராண்டிகள் எனக்குச் செய்த பொழுது, ஒரு பக்கம் அழுகையும், இன்னொரு பக்கம் அவர்கள் மீது சொல்லொணா ஆத்திரமும் பீறிட்டுக்கொண்டு வந்தது.

என்னைச் சைக்கிளில் ஏற்றிச் சென்றவனுடன் சின்னவனும் கூட வருகிறான் என்பதை, அவர்கள் இருவரினதும் உரையாடலிலிருந்து புரிந்து கொண்டேன். அவர்கள் என்னை எங்கே கொண்டு செல்கிறார்கள், என்ன செய்யப் போகிறார்கள் என்பதை என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஆனால், இதுவரை அவர்கள் என்னை வைத்திருந்த முகாம் தற்காலிகமானது என்பது மட்டும் புரிந்தது.

சிறிது நேரம் ஓடிய பின்னர், ஒரு இடத்தில் நிறுத்தினர். பின்னர் என்னைச் சைக்கிளிலிருந்து இறக்கி, கைகளைப் பிடித்து சில படிக்கட்டுகளில் ஏற்றிச் சென்று ஒரு வாங்கில் இருத்தினர். அதன் பின்னர் அவர்கள் யாருடனோ உரையாடுவது புரிந்தது. பின்னர் அவர்கள் என்னருகில் வந்து, எனது கண்களை மறைத்துக் கட்டியிருந்த துணியை அவிழ்த்துவிட்டனர்.

என்னைக் கொண்டு வந்தவர்களுடன், அந்த முகாமின் பொறுப்பாளன் என்று கருதக்கூடிய ஒருவன் என்னருகில் மிக நெருக்கமாக வந்து நின்று, என்னை மிகவும் கவனமாக உற்றுப் பார்த்தான்.

பின்னர் அவர்கள் சில அடி தூரம் தள்ளிச்சென்று ஏதோ கதைத்தார்கள். அந்த முகாமிலிருந்தவன் அப்பால் செல்லும் போது மற்றவர்களைப் பார்த்து, "ஆளைப் பாத்தால் சாதுவானவர் போலை கிடக்குது" எனச் சொன்னது எனது காதுகளில் கேட்டது.

அந்த முகாமிலும், நான் முன்னர் தங்க வைக்கப்பட்டிருந்த முகாமிலிருந்தது போல, முன்னால் ஒரு வட்டக் கொட்டில் போடப்பட்டு, ஒரு டுஆபு ரக துப்பாக்கியுடன் ஒருவன் காவலுக்கு இருந்தான். யாருக்கு பயப்பட்டு இவ்வாறு செய்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

என்னை அழைத்து வந்தவர்கள், அங்கிருந்தவனிடம் சுமார் பதினைந்து நிமிடங்கள் வரை ஏதோ தீவிரமாக உரையாடினார்கள். அவர்களது உரையாடலிலிருந்து, இவர்களது ஏதோவொரு கருத்தையோ அல்லது வேண்டுகோளையோ அவன் ஏற்கவில்லை என்பது தெரிந்தது. பின்னர், அவர்கள் என்னை திரும்பவும் சைக்கிளடிக்கு கூட்டிச் சென்று, எனது கண்களை திரும்பவும் கட்டிவிட்டு, சைக்கிளில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டார்கள்.

சிறிது நேர ஓட்டத்துக்குப் பின்னர், இன்னொரு முகாமுக்கு கொண்டு சென்று என்னை இறக்கினார்கள். அங்கும் முன்னது போலவே எல்லா சம்பிரதாயங்களும் நடந்தன. அங்கும் அந்த வட்டக் கொட்டில் காட்சி இருந்தது. ஒரு பூனையோ நாயோ அசைந்தாலும் கூட, அவற்றை உடனடியாகவே சுட்டுவிடக்கூடிய உசார் நிலையில், அந்தக் காவலாளிகள் வைக்கப்பட்டிருந்ததை அவதானித்தேன்.

ஏன் இவ்வளவு முன்னெச்சரிக்கை என்பதுதான் புரியவில்லை. இப்பொழுது யாழ் குடாநாட்டில் புலிகளுக்கு சவால் விடக்கூடிய எந்தச் சக்தியும் இல்லை. 1990ல் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவுடன் சேர்ந்துகொண்டு இந்திய அமைதிப்படையை புலிகள் வெளியேற்றிய பின்னர், மாற்று இயக்கங்கள் எதுவும் அங்கு செயற்படுவதில்லை. அவர்களில் சிலர் இந்திய இராணுவத்துடன் இந்தியாவுக்குச் சென்றுவிட்டனர். இன்னும் சிலர் தென்னிலங்கையில் தலைமறைவாகிவிட்டனர். வசதியானவர்கள் மேற்கு நாடுகளுக்கு புலம்பெயர்ந்து விட்டனர்.

செய்வறியாது அகப்பட்ட, சுமார் நாலாயிரம் பேர் வரையிலான ஈ.பி.ஆர்.எல்.எப், ரெலோ, புளொட் மற்றும் சில சிறு இயக்கங்களைச் சேர்ந்தவர்கள், துணுக்காயிலிருந்த புலிகளின் மிகப்பெரிய வதை முகாமில் அடைத்து வைக்கப்பட்டு, மிக மோசமான சித்திரவதைகளின் பின்னர், படிப்படியாகக் கொல்லப்பட்டுப் கொண்டிருந்தனர்.


தேனீ இணைய
10வது வருட
22.02 2002- 22.02.201

டன் தொலைக்காட்சி தொடர்புகட்கு



தேனீ இணையத்தளத்தி தோழர் மணியம் தொட எழுதும் புலிகளின் வதைமுகாம் அனுபவங்

புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுது அனுபவத்தொடர்

யாழ்ப்பாணத்தில் சாதி அரசியல் செயற்படும் முறை

அரசாங்கத்துக்கும் த தேசியக் கூட்டமைப்புக்கும் இடையேயான பேச்ச வார்த்தை சாதகமாக முன்னோக்கி நகர்கிற - (1 )

அரசாங்கத்துக்கும் த தேசியக் கூட்டமைப்புக்கும் இடையேயான பேச்ச வார்த்தை சாதகமாக முன்னோக்கி நகர்கிற - (2

பெரும்பாலும் தமக்கு எதிரான இயக்கங்களைச் சேர்ந்தவர்களையெல்லாம் கைதுசெய்து முடித்த பின்னரே, என் போன்ற சட்டபூர்வமான அரசியல் கட்சிகளில் செயல்பட்டவர்கள் மீது கைவைக்க ஆரம்பித்திருந்தனர். அவர்கள் கடித்தால் திருப்பிக் கடிக்கக்கூடியவர்கள் அல்ல நாங்கள். அப்படியிருக்க, ஏன் இந்த அளவுக்கதிகமான பாதுகாப்பு ஏற்பாடுகள் என்பது எனக்கு விளங்கவில்லை.

ஒருவேளை பலர் கூறுவது போல, புலிகளின் தலைவர் பிரபாகரன் யாரையும் நம்பாதவர், எல்லோரையும் சந்தேகிப்பவர் என்ற காரணத்தால், தம்மவர்களிடமிருந்து பாதுகாப்புத் தேடுவதற்காக இந்த ஏற்பாடோ என்னவோ?!

நாம் சென்ற அந்த இடத்திலும், என்னைக் கூட்டிச் சென்றவர்கள் எதிர்பார்த்த விடயம் நடக்கவில்லைப் போலும். அங்கிருந்தும் எனது கண்களை மீண்டும் கட்டிக்கொண்டு புறப்பட்டார்கள். அதன் பின்னரும் சில முகாம்களுக்கு என்னைக் கொண்டு சென்றார்கள். பெரும்பாலும் அந்த முகாம்கள் எல்லாம,; யாழ் நகரை அண்டிய பகுதிகளிலேயே இருந்ததை என்னால் அனுமானிக்க முடிந்தது. போன எல்லா இடங்களிலும் ஒரேவிதமான சடங்கு சம்பிரதாயங்கள் நிகழ்ந்தன. சென்ற எல்லா இடங்களிலும், ஒன்று தவறாமல் அதே வட்டக் கொட்டில் காட்சிகள் இருந்தன.

ஒரு இடத்தில் மட்டும், அவர்களது உரையாடல் எனக்குத் தெளிவாகக் கேட்டது. அங்கு பொறுப்பாக இருந்தவன் என்னைக் கொண்டு சென்ற சின்னவனைப் பார்த்து, "அம்மானின்ரை ஓடர் இல்லாமல் ஒருதரையும் பொறுப்பெடுக்கேலாது" எனச் சொன்னான்.

அதற்கு சின்னவன், "காந்தி அண்ணையின்ரை ஓடர் வந்துதான் ஆளைப் பிடிச்சனாங்கள்" என்று பதில் சொன்னான்.

பின்னர் அங்கிருந்தும் புறப்பட்டோம். அவர்களது உரையாடலிலிருந்து ஒரு விடயம் புரிந்தது. காந்தி என்ற முக்கியமான புலி உறுப்பினன் ஒருவனின் உத்தரவுப்படியே நான் கைது செய்யப்பட்டிருக்கிறேன். கைதுசெய்யப்பட்டிருந்தாலும், என்னை எழுந்தமானத்துக்கு பொறுப்பெடுப்பதற்கு எந்தவொரு முகாம் பொறுப்பாளருக்கும் அனுமதி இல்லை என்று தெரிந்தது. அதற்கு யாரோ ஒரு 'அம்மானின்' அனுமதி வேண்டும்.

யார் அந்த அம்மான்? ஒருவேளை புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர் பொட்டம்மானாக இருக்குமோ?

இறுதியாக அவர்கள் என்னை சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையிலிருந்த ஒரு பெரிய இரண்டு மாடி பங்களாவுக்கு கூட்டிச் சென்றார்கள்.

நேரம் நள்ளிரவைத் தாண்டி அதிகாலை இரண்டு மணிக்கு மேலாகியிருந்தது. எனக்கு தண்ணீர் தாகம் எடுத்தது. எனக்கு குடிக்கச் சிறிது தண்ணீர் தரும்படி அவர்களிடம் வேண்டினேன். ஒரு பெரிய கண்ணாடி கிளாசில் தண்ணீர் கொண்டு வந்து தந்தனர்.

அதன் பின்னர் எனக்கு ஒரு பாயும் தலையணையும் தந்து படுக்கும்படி கூறி, என்னை ஒரு அறைக்குள் வைத்துப் பூட்டிவிட்டு சென்றுவிட்டனர்.

செல்வதற்கு முன்னர், "நாங்கள் விறாந்தையில் தான் இருப்பம். ஏதாவது தேவையெண்டால் கதவைத் தட்டுங்கோ" என்று சொல்லிவிட்டுச் சென்றனர்.

அவர்கள் புறப்பட்ட சிறிது நேரத்தில,; அவர்களது காலடி ஓசைகள் அடங்கிய பின்னர், அந்த அறையின் தெருவோர ஜன்னலின் சிறு நீக்கலுக்கூடாக வெளியே பார்த்தேன். என்னைக் கொண்டுவந்து விட்ட இருவரும், சைக்கிளில் எங்கோ புறப்பட்டுச் செல்வது தெரிந்தது. தாம் அங்கிருப்பதாக எனக்குப் பொய் சொல்லியிருக்கிறார்கள் என்பது புரிந்தது.

அத்துடன், அந்த இடம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் உள்ளது என்பதும் புரிந்தது. அனேகமாக வட மாகாணத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் எனது காலடி பட்டிருந்த எனக்கு, அதிலும் யாழ் நகரின் ஒவ்வொரு அங்குல மண்ணையும் மிதித்தும், மதித்தும் இருந்த எனக்கு, அந்த இடம் சுண்டிக்குளி என்பதைக் கண்டு பிடிக்க அதிக நேரமாகவில்லை.

அன்றைய அலைச்சலின் களைப்புக் காரணமாக, எனது நீணடகால ஆஸ்த்துமா நோய் தனது இழுப்பு அறிகுறியைக் காட்ட ஆரம்பித்தது. சிறிது நேரம் ஆறுவதற்காக படுக்கையில் சாய்ந்தேன். நித்திரை வர மறுத்தது.

யாழ்ப்பாண நகரின் கட்டாக்காலி நாய்களின் காதைக் கிழிக்கும் ஓலங்கள,; அங்குமிங்கும் கேட்டவண்ணம் இருந்தன. விடிகாலையின் உதயத்தை உணர்ந்த சில சேவல்களின் கூவல்களும் இடையிடையே கேட்டன.

தொடரும்......

முன்னைய பதிவுகள்